*2011 பிப்ரவரி 9]*

*அதேபோல, சத்துணவுப் பணியாளர்கள் மற்றும் அங்கன்வாடிப் பணியாளர்களுடைய கோரிக்கைகளைப்பற்றிக் கூறினார்கள். கலைஞர் அவர்கள் பொறுப்பேற்ற பின்புதான் அவர்களுக்குப் பதவி உயர்வு வாய்ப்பு வழங்கப்பட்டு, முதற்கட்டமாகச் சத்துணவுப் பணியாளர்கள் 40 பேருக்கு அரசுத் துறையிலே, கால முறை ஊதியத்தில், கடந்த வாரம் மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களால் பணி ஆணைகள் வழங்கப்பட்டன. அதேபோல, பி.எட். பட்டதாரிகளுக்கு வருகின்ற 20 ஆம் தேதி, அரசு தேர்வாணையத்தின்மூலம், சிறப்புத் தேர்வு நடத்தப்படவுள்ளதாக தேர்வாணையம் அறிவித்துள்ளது. அதன்மூலம் அவர்கள் கல்வித் துறையில் ஆசிரியர்களாகப் பணி நியமனம் செய்வதற்காக சிறப்புத் தேர்வு அறிவிக்கப்பட்டுள்ளது.*

*அதேபோல, பதவி உயர்வு, ஓய்வூதியம், ஊதிய உயர்வு போன்ற சலுகைகள் எல்லாம் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றதற்குப் பின்னர் வழங்கப்பட்டுள்ளன. தொடர்ச்சியாக, நீங்கள் கூறுவதுபோன்று அரசுத் துறைகளிலே பணி நியமனம் செய்ய வேண்டுமென்ற கோரிக்கையையும் அரசு பரிசீலிக்கும்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 38, மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு, மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

**38—**

**விடுதி**

***59025—திரு. ப. டில்லி பாபு:**

*மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) தருமபுரி மாவட்டம், அரூர் வட்டம், கே. வேட்ரப்பட்டியில் புதியதாக பெண்கள் ஆதி திராவிடர் நல விடுதி தொடங்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

[2011 பிப்ரவரி 9

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், அரூர் வட்டம், கே. வேட்ரப்பட்டியில் புதியதாக பெண்கள் ஆதி திராவிடர் நல விடுதி தொடங்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு.

**திரு. ப. டில்லி பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி மாவட்டம், அரூர் தொகுதிக்குட்பட்ட கே. வேட்ரப்பட்டி மேல்நிலைப் பள்ளி 1969 ஆம் ஆண்டு முதல் செயல்பட்டு வருகிற பள்ளியாகும். அதில் சுமார் ஆயிரம் மாணவர்களுக்கு மேல் படித்து வருகின்றனர். ஏறக்குறைய 5 கிலோ மீட்டர் தூரம் முதல் 15 கிலோ மீட்டர் தூரம் வரையுள்ள இடங்களிலிருந்து மாணவர்கள் அந்தப் பள்ளிக்கு வருகின்றனர். கீழானூர், செல்லம்பட்டி, எஸ். பட்டி, முத்தானூர், கரிப்பிலைப்பட்டி, வடுகப்பட்டி, ஈச்சப்பாடி, பறையப்பட்டி, கணபதிப்பட்டி, மத்தியப்பட்டி இப்படி 10 நடுநிலைப் பள்ளிகளிலுள்ள அத்தனை மாணவர்களும் இந்த கே. வேட்ரப்பட்டி பள்ளிக்குத்தான் வர வேண்டியிருக்கிறது. ஏறக்குறைய 15 கிலோ மீட்டர் சுற்றளவுக்குள் இந்தப் பள்ளியைத் தவிர வேறு எங்குமே உயர்நிலைப் பள்ளியோ அல்லது மேல்நிலைப் பள்ளியோ கிடையாது. ஆயிரத்திற்கும் மேற்பட்ட மாணவர்கள் படிக்கக்கூடிய இந்தப் பள்ளியில், 400–க்கும் மேற்பட்ட மாணவிகள் தங்கிப் படிக்கிறார்கள். இவர்களுக்கு விடுதி வசதி இல்லாததால் உயர் கல்வி படிக்க முடியாத, அதாவது மேல்நிலைக் கல்வி படிக்க முடியாத அவல நிலை தருமபுரி மாவட்டத்தில் தொடர்ந்து நிலவி வருகிறது. அனேகமாக தமிழகத்திலே கல்வியில் மிகவும் பின்தங்கியிருக்கும் மாவட்டம், தருமபுரி மாவட்டமாகும். அதிலும், ஆதி திராவிட பெண்களுடைய கல்வியறிவு 40.2 சதவிகிதம் என்று அரசே குறிப்பிட்டிருக்கிறது. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், ஏற்கெனவே நான்கு ஆண்டு காலத்திலே இரண்டு விடுதிகள் தருவதாக அறிவித்து ஒரு விடுதி அளித்ததற்கு நன்றி. இந்த விடுதி ஏறக்குறைய 15 கிலோ மீட்டர் சுற்றளவில் இருக்கக்கூடிய 15 பள்ளிகளிலே படிக்கின்ற மாணவர்கள், எதிர்காலத்தில் கல்வியைக் கற்பதற்கு உதவிகரமாக இருக்கும் என்பதைப் பரிசீலித்து, இந்த ஆண்டாவது கே. வேட்ரப்பட்டியிலே பெண்கள் விடுதியைத் தொடங்குவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

*2011 பிப்ரவரி 9]*

*முற்பகல் 10–25*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேவை மற்றும் முன்னுரிமை அடிப்படையில், ஆதி திராவிட மாணவ, மாணவிகளுக்குப் புதிய விடுதிகள் தொடங்கப்பட்டு வருகின்றன. தமிழகத்தில் மொத்தம் 1,254 விடுதிகள் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. தருமபுரி மாவட்டத்தில் மட்டும் 32 ஆதி திராவிட நல விடுதிகளும், அரூர் சட்டமன்றத் தொகுதியில் மட்டும் 11 ஆதி திராவிட நல விடுதிகளும் இயங்கிக் கொண்டிருக்கின்றன.*

*மாண்புமிகு முதலமைச்சர் தலைவர் கலைஞர் அவர்களின் அரசு பொறுப்பேற்ற பின்னர் இதுவரை 77 புதிய விடுதிகள் தொடங்கப்பட்டிருக்கின்றன. அரூர் தொகுதியில் தீர்த்தமலையில் 2008–2009 ஆம் ஆண்டு புதிய மாணவர் விடுதி அரூர், சட்டமன்ற உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கைக்கு ஏற்ப திறக்கப்பட்டுள்ளது. மேலும், மொரப்பூர் சட்டமன்ற உறுப்பினர் அண்ணன் திரு. முல்லைவேந்தன் அவர்களுடைய கோரிக்கையை ஏற்று மொரப்பூரிலும், காளிப்பேட்டையிலும், தலா ஒரு மாணவியர் விடுதி தொடங்கப்பட்டிருக்கிறது. மேலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை குறித்து, இந்த ஊரில் துறையின் சார்பாக ஆய்வினை மேற்கொண்ட நேரத்தில் மாணவியர்களுக்கான விடுதி தொடங்கப்பட வேண்டுமென்ற தேவை இருப்பதாக நிருவாகத்தின் சார்பில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. மாணவியர்களின் நலனைக் கருத்திற்கொண்டு, மாண்புமிகு முதலமைச்சர் தலைவர் கலைஞர் அவர்கள், ஆறாவது முறையாக அரசுப் பொறுப்பேற்றவுடன் அங்கு விடுதி தொடங்கப்படும் என்பதை நான் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன். (குறுக்கீடு).*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *திரு. ப. டில்லி பாபு, அமைச்சர் அவர்கள்தான் முறையாகப் பதில் சொல்லிவிட்டார்கள் அல்லவா? மேலும், என்ன கேட்கப் போகின்றீர்கள்?*

[2011 பிப்ரவரி 9

**திரு. ப. டில்லி பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் விடுதி மாணவர்களுடைய கோரிக்கை குறித்து, ஒரு பெரிய இயக்கமாகக்கூட நடத்தியிருக்கின்றார்கள். இந்திய நாடு முழுவதும், குறிப்பாக, தமிழகத்திலே விடுதி மாணவர்களுக்காக உணவுக் கட்டணம் ரூ.18.50 மட்டுமே வழங்கப்பட்டு வருகிறது. கேரளாவிலே ஒரு மாதத்திற்கு ரூ.1,500–ம், கர்நாடகாவிலே ரூ.850, ரூ.900 வழங்கப்படுகிறது. ஆனால், தமிழகத்தில் ரூ.550, ரூ.450 மட்டுமே வழங்கப்பட்டு வருகிறது. காவல் துறையினுடைய மோப்ப நாய்களுக்குக்கூட ஒரு நாளைக்கு உணவிற்காக ரூ62 செலவிடப்படுகிறது. ஆனால், பள்ளியில் படிக்கின்ற மாணவர்களுக்கு, ஒரு நாளைக்கு ரூ.18, ரூ.15 என்பது மிகமிகக் குறைவானதே. ஆகவே, சரியான அளவிற்கு போதிய சத்துணவு உண்ண முடியாமல், பல பள்ளிகளில், பல கல்லூரிகளில் படிக்கக்கூடிய மாணவர்கள், கோவை, மதுரை மற்றும் விருதுநகர் போன்ற இடங்களில் படிக்கும் பல்வேறு மாணவர்கள் திருமண நிகழ்ச்சிகளின் கேட்டரிங்கில் பணிபுரிந்து, அங்கேயே உணவு அருந்தக்கூடிய நிலைமைகள் இன்றைக்கு தமிழகத்திலே பல இடங்களிலே நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அதுமட்டுமல்ல, செங்கல்பட்டு மாவட்டத்தில் இருக்கக்கூடிய பல விடுதிகள். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப. டில்லி பாபு, நீங்கள் மானியக் கோரிக்கையில் பேசவில்லை. கேள்வியை மட்டும் கேளுங்கள்.

**திரு. ப. டில்லி பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதோ கேட்டு முடித்துவிடுகிறேன். விடுதிகளின் எண்ணிக்கையைப் பொறுத்தவரையில், சென்னையில், கோடம்பாக்கமாக இருந்தாலும் சரி, வில்லிவாக்கமாக இருந்தாலும் சரி, அங்கேயுள்ள விடுதிகளில் 10 x 16 அறைகளில் 30 மாணவர்கள் தங்கியிருந்து படிக்கக்கூடிய ஓர் அவல நிலை இன்றைக்கு இருக்கின்றது. ஆகவே, விடுதிகளினுடைய எண்ணிக்கையை உயர்த்துவதற்கு, 5–ஆம் பிரகடனமும், இந்திய அரசியல் சாசன சட்டம் 14, 21, 19–இன்படி அடிப்படை வசதிகள் செய்ய வேண்டிய, பல்வேறுபட்ட அம்சங்கள் தமிழகத்திலே இன்னும் நிறைவேற்றப்படவில்லை. முழுமையாக அமலாக்கப்படவில்லை. அதை இந்த அரசு வரும் ஆண்டிலாவது அமல்படுத்துமா என்பதைத் தங்கள் வாயிலாக கேட்டு அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

2011 பிப்ரவரி 9]

மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் தலைவர் கலைஞர் அவர்கள் அரசு பொறுப்பேற்றவுடன், மாணவர்களுடைய நலனைக் கருத்தில்கொண்டு, விடுதி மாணவர்களுக்குப் பல்வேறு வசதிகளை தலைவர் கலைஞர் அவர்கள் நிறைவேற்றித் தந்திருக்கின்றார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் உணவுக் கட்டணத்தைப் பற்றி இங்கு குறிப்பிட்டுச் சொன்னார்கள். தலைவர் கலைஞர் அரசு பொறுப்பேற்றதற்குப் பிறகு, இரண்டு முறை, உணவுக் கட்டணம் உயர்த்தி வழங்கப்பட்டிருக்கிறது. 2007–2008 ஆம் ஆண்டு ரூ.300–ஆக இருந்த உணவுக் கட்டணம் ரூ.400–ஆக உயர்த்தப்பட்டிருக்கிறது. பள்ளி மாணவர்களுக்கு 2008–2009–ல் ரூ.400–ஆக இருந்த உணவுக் கட்டணம் ரூ.450–ஆக உயர்த்தப்பட்டிருக்கிறது. அதேபோல, கல்லூரி மாணவர்களுக்கு, கழக அரசு பொறுப்பேற்றவுடன், ரூ.400–ஆக இருந்த உணவுக் கட்டணம், ரூ.500–ஆகவும், ரூ.500–ஆக இருந்த உணவுக் கட்டணம், ரூ.550 ஆகவும் உயர்த்தப்பட்டிருக்கிறது.

கடந்த முறை ஆட்சியிலிருந்தவர்கள் பள்ளியில் படிக்கின்ற மாணவர்களுக்கு உணவுக் கட்டணத்தை வெறும் ரூ.75–ஐதான் உயர்த்தித் தந்திருக்கின்றார்கள். கல்லூரி மாணவர்களுக்கு உணவுக் கட்டணம் உயர்த்தப்படவேயில்லை. ஆனால், இன்றைக்கு தலைவர் கலைஞர் அரசு பொறுப்பேற்றதற்குப் பிறகு மாணவர்களுக்கு சரியானமுறையில் உணவு வழங்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. குறிப்பாக விடுதியில் படிக்கின்ற மாணவர்களுக்கு காலையில் சிற்றுண்டியும், மாலை நேரங்களில் சிற்றுண்டியோடு சேர்த்து டீ, காபியும் வழங்கப்படுகின்றது. தலைவர் கலைஞர் அரசு பொறுப்பேற்ற காரணத்தினால்தான், இவையெல்லாம் மாணவர்களுக்குச் செய்து தரப்பட்டிருக்கின்றன. ஆங்காங்கே தேவைப்படுகின்ற தேவைகளையும் இந்த அரசு கவனத்தில்கொண்டு, அதற்கான பணிகளையும் விரைவாக செய்யும் என்பதையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

முற்பகல் 10–30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன் அனுமதியுடன் வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது. வினா வரிசை எண் 39, மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. மோகன், மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்கள்.